செய்தி வெளியீடு எண்:756 நாள்:21.09.2021

செய்தி வெளியீடு

**புழக்கடைக் கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் 3936 நிலமற்ற மற்றும் ஏழை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.3.53 கோடி நிதியுதவி - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (21.9.2021) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவித்திட 3936 நிலமற்ற மற்றும் ஏழை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தலா 100 நாட்டு கோழிக் குஞ்சுகளை வளர்க்க ரூ.3.53 கோடி நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக ஒரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினருக்கு நிதியுதவி வழங்கினார்.

அதன்படி, இந்த ஆண்டு 1663 கிராம ஊராட்சிகளில், ஊராட்சி ஒன்றிற்கு 3 அல்லது 4 புழக்கடைக் கோழி வளர்ப்பு அலகுகள் வீதம், 5528 அலகுகள், அலகு ஒன்றிற்கு 9000 ரூபாய் வீதம் ரூ.4.97 கோடி மதிப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை 1592 புழக்கடைக் கோழி வளர்ப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 3936 அலகுகள் அமைக்க நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு புழக்கடைக் கோழி வளர்ப்பு அலகிலும் 10 கோழிக்குஞ்சுகளுக்கு ஒரு சேவல் குஞ்சு என்று 100 குஞ்சுகள் வழங்கப்படும். இந்தக் கோழிக்குஞ்சுகளை வளர்ப்பதற்கான கொட்டகை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பின் மூலம் அமைத்து தரப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9